Date: 15.07.22                    C.C.No.   221 /2021

அ.சா.1 ஆண்டிச்சாமி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான் 8ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன். என்னுடைய கையெழுத்து சின்ன எழுதில்தான் செய்வேன் என்றால் சரிதான். A மட்டும் பெரிய எழுத்தில் போடுவேன், மற்ற எழுத்துக்கள் சின்ன எழுத்துக்களில் போடுவேன். சம்பவத்திற்கு பின்னிட்டு காவல் நிலையம் சென்றுவிட்டுதான் மருத்துவமனைக்கு சென்றேன். காவல் நிலையம் சென்றதும் நான் அங்கேயே இருந்தேன், அடிபட்ட பழனிமுருகன் மற்றும் பாப்பா ஆகியோரை மருத்துவமனைக்கு போலீசார் போகச்சொல்லிவிட்டனர். பழனிமுருகனிடமும் பாப்பாவிடமும் போலீசாா காவல் நிலையத்தில் வைத்து எழுதி வாங்கவில்லை, மருத்துவமனையில் வைத்து எழுதிவாங்கினார்கள். அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதவில்லை, நான் சொல்ல சொல்ல காவல் நிலையத்தில் உள்ளவர் எழுதினார். சம்பவ இடத்தில் நடந்த விவரங்களை அப்படியே நான் சொல்லிவிட்டேன், அதை புகாராக எழுதிக்கொண்டனர். மேற்படி புகாரில் நான் கையொப்பம் செய்தேன். சம்பவத்தன்றே நான் புகார் கொடுத்துவிட்டேன். மேற்படி சம்பவத்தில் எனக்கு காயங்கள் இல்லை. அ.சா.2 பழனிமுருகன் எனது மாமா உறவுமுறையாவார். இந்த வழக்கிலுள்ள மற்ற சாட்சிகள் அணைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான், சாட்சி 3 பாப்பா என் தாயார். சம்பவம் நடைபெற்ற அன்று புகார் கொடுத்துவிட்டு மறுநாள் காலையில் 10 மணிக்கு வரச்சொன்னார்கள். நாங்கள் காவல் நிலையம் சென்று எழுதிக்கொடுத்துவிட்டு எங்களை விசாரித்தார்கள். 2 தடவை நான் புகார் கொடுத்தேன் என்றால் புகார் சம்பவத்தன்று ஒருமுறைதான் கொடுக்கப்பட்டது, அந்த புகாருக்காக மறுநாள் வரச்சொன்னார்கள் நாங்கள் சென்றோம், எங்களை விசாரித்து எழுதி வாங்கினார்கள். நான் போலீஸ் விசாரணையில் சொன்ன விசயத்தைத்தான் நான் இங்கு சாட்சியாக சொல்கிறேன் என்றால் என்ன நடந்ததோ அதை போலீஸ் விசாரணையில் சொன்னோம். அதைத்தான் இங்கேயும் சாட்சியாக சொல்கிறேன். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே அந்தமானில் உள்ள இடம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான், எனது தம்பி வாங்கிய இடத்திற்காக என்னிடம் வந்து எதிரிகள் பிரச்சனை செய்கிறார்கள். சம்பவமானது மாலை 04 மணியிலிருந்து 04.30 மணிக்குள் நடைபெற்றது.

நான் கூறுவதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அந்தமானில் உள்ள இட பிரச்சனை சம்மந்தமாக இங்கே ஒரு இடத்தை எதிரிகள் எழுதிக்கேட்டதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். போலீசார் 2, 3 நாட்கள் தொடர்ச்சியாக சம்பவ இடம் வந்து அக்கம்பக்கத்தில் விசாரணை நடத்தி, மேப் போட்டு படம் வரைந்தார்கள். அ.சா.2 எனது நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Date: 15.07.22 C.C.No. 221 /2021

அ.சா.2 பழனிமுருகன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

எனக்கு நன்றாக எழுதபக்படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் தற்போது நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் வென்று ஊராட்சிமன்ற துணைத்தலைவராக இருக்கிறேன். நான் ஊராட்சிமன்ற துணைத்தலைவராக இருப்பதால் கீழவளவு காவல் நிலையத்தில் நான் நன்கு பரீட்சயம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இரத்தக்காயத்துடன் காவல்நிலையம் சென்றபோது என்னை உடனே மருத்துவமனைக்கு போகச்சொல்லிவிட்டார்கள், அங்கு வந்து வாக்கு மூலம் பெற்றுக்கொண்டார்கள். மருத்துவமனையில் வந்து போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா.1 என் மச்சான் என்றால் சரிதான். மற்ற சாட்சிகள் 3 முதல் 6 வரையிலானோர் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். எனக்கு மருத்துவமனைக்கு வரும்பொழுது என்னால் சீராக நடந்துவரமுடியவில்லை. தலையில் அடிபட்டிருந்ததால் என்னால் ஒழுங்காக பதில் சொல்லமுடியவில்லை. சம்பவ இடத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் சந்திரன் மற்றும் லெட்சுமணன் ஆகியோர் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர். அதன்பின்பு என்னை காரில் வைத்து மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். மருத்துவமனையில் சேர்க்கும்போது நான் பதில் சொல்லும் நிலையில் இல்லை. என்ன நடந்தது என்று என் அருகிலிருந்தவர்கள் சொன்னார்கள். என்மீது கீழவளவு காவல் நிலையத்தில் 2, 3 வழக்குகள் உள்ளது என்றால் எனது பங்காளிகளுக்குள் தீபாவளி சமயத்தில் வெடி வெடிப்பதில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. போலீசார் என்னை வீட்டில் வந்து விசாரிக்கவிலை.

சம்பவம் நடைபெற்ற பின்பு மருத்துவமனையில் விசாரித்ததை தவிர போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிகள் எங்களை அடிக்கடி துன்புறுத்தி வருகிறார்கள் என்று சொல்வதற்கு அவர்கள்மீது புகார் அளித்து வழக்கு எதுவும் பதியப்பட்டுள்ளதா என்றால் நான் கீழவளவு காவல் நிலையத்தில் புகார் அளித்து அவர்கள் எதிரிகளிடம் எழுதி வாங்கியுள்ளார்கள். என்மீதும் எதிரிகள் புகார் அளித்து கீழவளவு காவல் நிலையத்தில் என்னிடமும் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், என்மீது புகார் கொடுக்கப்பட்டு காவல் நிலையத்தில் என்னிடம் எழுதி வாங்கப்பட்டள்ளது என்றாலும் சரியல்ல. நான் ஊராட்சிமன்றத்தேர்தலில் போட்டியிட்டபோது எதிரிகள்தரப்பில் ஒரு நபர் போட்டியிட்டார் என்றால் கிராமத்தில் பேசி முடிவெடுத்து எதிரிகள்தரப்பில் போட்டியிலிருந்து வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். எதிரிகள்தரப்பில் வாபஸ் வாங்க மறுத்துவிட்டார்கள் என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கிராமமே சேர்ந்து முடிவு எடுத்ததால் எதிரிகள் தரப்பில் வாபஸ் பெற்றுக்கொண்டனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் எனக்கு வீடு வாசல் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

எதிரிகள்தரப்பில் ஊராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவதை நான் தடுக்கும் வண்ணம் நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.